[1987 மார்ச் 27

மானாமதுரை ஆதி திராவிடர் செங்கல் உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம்.

119—(* வினா எண். 8836) திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர்களுக்காக செங்கல் உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் இது சம்பந்தமாக ஒரு கருத்துரு உள்ளது. அக்கருத்துரு 1987-88 பகுதி 2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, மானாமதுரையில் மட்பாண்டத் தொழிலுக்கும், செங்கல் தொழிலுக்கும் ஏற்ற மண் அதிகமாக இருக்கிறது. இந்தத் தொழிலில் பெரும்பகுதி மக்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது பக்கத்திலே பல்வேறு தொழில்கள் இன்றைக்கு வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிலுக்கும் சிறப்பான எதிர் காலம் இருக்கிறது. ஆகவே விரைவாக ஆரம்பித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி இரண்டாவது திட்டத்திலே, சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அடுத்த பகுதி இரண்டாவது

1987 மார்ச் 27]

திட்டத்திலே சேர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அதற்கான முயற்சியை அரசாங்கம் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 206 முதல் 210 வரை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

வாணியம்பாடியில் தோல் பதனிடும் ஆய்வு நிலையம்.

120—(* வினா எண். 10402) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழில் பற்றிய ஆய்வு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

பட்டதாரி காவலர்களுக்கு பட்டதாரி படி வழங்கல்.

1—வினா 1844—**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இதர அரசு அலுவலர்களுக்கும் அரசு நிறுவனங்களில் பணி புரிவோருக்கும் வழங்கப்படும் பட்டதாரிகள் அலவன்ஸ் காவல் துறையில் பணி புரியும் பட்டதாரி காவலர்களுக்கும் வழங்க செயற்குறிப்பு உள்ளதா?